# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 05 செவ்வாய்க்கிழமை (21-07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 201


# "கறுப்பு ஜூலை"யை ஒட்டி படைகள் உஷார் நிலையில்!

## நேற்றிரவு தேடுதல்

கொழும்பில் செஹிவளைப் பகுதியில் நேற்றிரவு 11 மணிக்குப் பின்னர் பெரும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸாரும், படையினரும் இணைந்து கூட்டாக நடத்திய இத் தேடுதலில் சுமார் 25 தமிழர்கள் கைது செய்யப்பட்டதாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ஐ)

## வீதிச் சோதனை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 21

'கறுப்பு ஜூலையின்' 15 ஆவது ஆண்டு நிறைவு நாள்களை ஒட்டி தலைநகர் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

'83 ஜூலைக் கலவரம்' என அழைக்கப்படும் கறுப்பு ஜூலை நினைவு நாள்களில் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்த்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் கொழும்பில் வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபத்தப்பட்டுள்ள பொலீஸாரும், பாதுகாப்புப் படையினரும் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடாநாட்டிலும் வீதிச் சோதனை நடவடிக்கைகள் சற்று அதிகரித்துக் காணப்படுகின்றன.

திருநெல்வேலியில் நடத்தப்பட்ட கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றில் 13 இராணுவத்தினர் பலியானதைத் தொடர்ந்து தென் பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரங்கள் கட்டவிழ்த்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## மழையினால் ஒருவர் பலி 12,500 பேர் வீடு இழப்பு

கடந்த சில தினங்களாகத் தொடர்ந்துபெய்துவரும் கடு மழையினால் கழுத்துறையில் ஒருவர் உயிரிழந்தார்.

மழைவெள்ளம் காரணமாக சுமார் 12 ஆயிரத்து 500 பேர் வரை இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தங்கியுள்ளனர் (இ-9)

(மற்றும் ஒரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## மருத்துவ சங்க வேலை நிறுத்தம் இன்று இல்லை?

கொழும்பு, ஜூலை 21

அரசாங்க மருத்துவர் சங்கம் இன்று நடத்தவிருந்த வேலை நிறுத்தப் போராட்ட தீர்மானதைக் கைவிட்டுள்ளதாக இறுதியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தென் ஆபிரிக்காவிலிருந்து 17 தமிழர் நாடு கடத்தல்!

### விமான நிலையத்தில் கைது

கொழும்பு, ஜூலை 21

தென் ஆபிரிக்கத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பலொன்றில் இருந்து கைது செய்யப்பட்ட 17 இலங்கைத் தமிழர்கள் உட்பட 19 பேர் நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கியவுடன் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மொத்தம் 1 கோடி 91 இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட இவர்கள் மீண்டும் ஒகஸ்ட் 28ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

பிரிட்டன் செல்வதற்காக இவர்கள் தென் ஆபிரிக்க மார்க்கமாக அனுப்பி வைக்கப்பட்டபோது கைதாகி நாடு கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## சவூதி செல்லவிருந்தயுவதி விமான நிலையத்தில்கைது

சவூதி செல்லவிருந்த மட்டக்களப்பு யுவதி ஒருவர் கட்டு நாயக்கா விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப்புலிகள்தொடர்பான ''வீடியோ'' கசெட் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக இரகசியப் பொலீஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி வாசியான மேற்படி யுவதியை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர் கொழும்பு மஜிஸ்திரேட் உத்தரவிட்டார், (இ-21)

## நிவாரண வெட்டை ஆட்சேபித்து மன்னாரில் நேற்று கண்டனப் பேரணி!

வவுனியா, ஜூலை 21

வடக்கில் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துவது என்ற அரசின் முடிவைக் கண்டித்து மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

பாலம்பிட்டிப் பகுதியில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்டு மடுவுக்குச் சென்றடைந்த நூற்றுக்கணக்கான மக்கள் அங்கிருந்து பேரணியில் கலந்து கொண்டனர்.

நிவாரண வெட்டைக் கண்டிக்கும் பலவித பதாகைகளைத் தாங்கியவாறு பேரணியில் திரண்ட மக்கள் அங்கிருந்து தச்சனா மருதமடுவில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின்திறந்த நிவாரண நிலையத்தைசென்றடைந்தனர். பின்னர் மன்னார் வெகுஜன ஒன்றியத் தலைவர் பா. உதயச்சந்திரன் தலைமையில் அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டுறவுச் சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற் சங்கங்களின் பிரதி நிதிகள் அக்கூட்டத்தில் உரையாற்றினர்.

ஜனாதிபதிக்கும் ஐ. நா.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் கைது!

கொழும்பு, ஜூலை, 21

வவுனியாவில் உள்ள பத்திரிகையாளர் பொ. மாணிக்கவாசகர் நேற்று அவரது இல்லத்தில் வைத்து சீ. ஐ டி. பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் அவரது வீட்டிற்குச் சென்ற சீ,ஐ.டி பொலீஸார் மூவர் மேலிடத்தில் இருந்து விடுக்கப்படட பணிப்புரையின் பேரில் அவரைக் கைது செய்வதாகக் கூறி அழைத்துச் சென்றனர்.

கைது செய்வது தொடர்பான மேலிட உத்தரவினை நிரூபிக்கும் ஆவணங்களைப் பொலீஸார் அவரது மனைவியிடம் காட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

விசாரணைக்காக அவர் கொழும்புக்குக் கொண்டு செல்லப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-21-64)

## மன்னார் - வவுனியா வீதியில் கிளைமோர்!

மன்னார்-வவுனியாவீதியில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்தாக்குதலில் இராணுவ மேஜர் ஒருவரும்சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

காலை 8-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட ஜீப் ஒன்றே இத் தாக்குதலில் அகப்பட்டது. மேலும் 2 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் செய்திகள் தெரிவித்தன, (இ-21)

## உலர் உணவு விநியோகத்தில் சிறு மாற்றங்களே செய்யப்பட்டுள்ளன

### அரசாங்கம் கூறுகிறது

கொழும்பு, ஜூலை 21

நிதிப்பற்றாக்குறை காரணமாக யாழ்ப்பாண அகதிகளுக்கான நிவாரணப் பொருள்கள் விநியோகம் குறைக்கப்பட்டு உள்ளதாக வெளியாகியுள்ள அறிக்கையை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது.

உதவிகளைக் குறைக்காமல் அத்தியாவசியசேவைகள் ஆணையாளர் நாயகம் உலர் உணவு விநியோகத்தில் சில மாற்றங்கள் மட்டுமே கொண்டு வந்துள்ளார் என நேற்று வெளியிடப்பட்ட அரசாங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றப்பட்ட 40 ஆயிரம் குடும்பங்களில் அனேகமானவை தமது விவசாயத் தொழில்களை மீண்டும் தொடங்கியுள்ளன.

இந்தக் குடும்பங்கள் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க 20 கோடி ரூபா வரை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

பலர் ஏற்கனவே தமது காணிகளில் இருந்து பயிர்களை அறுவடை செய்யவும் தொடங்கி விட்டார்கள்.

இவ்வாறு உணவுப் பொருள்களைத் தாமே பெற்றுக் கொள்ளும் நிலையில் அவர்கள் இருப்பதால் 30 ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவு விநியோகம் குறைக்கப்பட்டுள்ளது.

தமிழ் அகதிகளுக்குச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆடி அமாவாசையன்று கீரிமலையில் பிதிர்க்கடன் நிறைவேற்ற ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 21

எதிர்வரும் வியாழக்கிழமை ஆடி அமாவாசைத் தினமாகும். இந்துக்களின் புனித நாளான அன்றையதினம் கீரிமலையில் புனித தீர்த்தத்தில் நீராடவும், பிதிர்க்கடன் நிறைவேற்றவும் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன் அறிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படையினரின் சிகிச்சைக்கு மருந்து வழங்கக் கோரி வேலை நிறுத்தம்!

## அரச மருத்துவர் சங்கம் இன்று ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 21

போர் முனையில் காயம் அடையும் படையினருக்கு சிகிச்சை அளிக்க போதிய மருந்து வகைகளை வழங்க வேண்டும் என்று கோரி அரச மருத்துவர் சங்கம் இன்று வேலை நிறுத்தத்தில் குதிக்க முஸ்திபு செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் பொலநறுவைப் பகுதி வைத்தியசாலைகளுக்கு கொண்டுவரப்படும் படையினருக்கு சிகிச்சை அளிக்க போதிய மருந்துப் பொருள்கள் வழங்கப்படுவதில்லை என்றும் —

இதன் காரணமாக அந்த ஆஸ்பத்திரிகளில் பணி புரியும் வைத்தியர்கள் முறைப்படி சேவையாற்ற முடியாத நிலை உள்ளது என்றும் —

மருத்துவர் சங்கப் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-3)

## ஆசிரிய கலாசாலைக்கு ரூபா 25 கோடி இழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

கடந்தகால அனர்த்தங்கள் காரணமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு சுமார் 25 கோடி ரூபா பெறுமதியானசேதம்ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கல்லூரியின் விடுதி மற்றும் சாப்பாட்டு மண்டபம், அதனை அண்டிய கட்டடங்கள் என்பன பெரிய அளவிலான சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

அத்துடன் தண்ணீர்த் தாங்கியும் சேதமடைந்துள்ளது. நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்ற பல்வேறு பொருள்களும் சேதமடைந்துள்ளன.

தற்போது இக்கலாசாலையின் முதலாம் வருடத்தில் 107 மாணவர்களும் 2 ஆம் வருடத்தில் 25 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றார்கள்.

இவர்களில் வெளிமாவட்ட மாணவர்கள் பலர் இருக்கின்றனர். விடுதி வசதி இல்லாமையினால் இந்த மாணவர்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகினர். இவர்கள் வெளி இடங்களில் தங்கியிருந்து கல்வி கற்கின்றனர்.

## விவசாயிகளின் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ். மாவட்டத்தில்உள்ள விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் ஆனி மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு நாளை புதன்கிழமை கமத்தொழில் காப்புறுதிச் சபைமாவட்டக்காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

இதனைப் பெறுகின்ற விவசாயிகள் தவறாது தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ]


உ
சாவகச்சேரி
அருள்மிகு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
திருவிளக்குப் பூஜை

அடியார்களே!

எதிர்வரும் ஆடிப்பூரத் திருநாளன்று 27-07-1998 திங்கட்கிழமை 2 மணிக்கு திருமணம் ஆகாத கன்னிப் பெண்களும் சுமங்கலிப் பெண்களும் பங்கு கொள்ளும் திருவிளக்குப் பூஜை நடைபெறும்.
பங்கு கொள்ளும் மாதரசிகள் தாமதியாது தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்க.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

நன்றி.

பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா
[ஆலய தர்மகர்த்தா]
(சி/4338)



உ
சாவகச்சேரி
அருள்மிகு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
சித்திரத்தேர்

அன்புடையீர்!
நாளை 22-07-98 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னை துர்க்காதேவி சித்திரத் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு எல்லாம் காட்சிஅளித்து திருவருள் பாலிப்பாள்.
27-07-98 ஆடிப்பூரத் திருநாளன்று பி. ப 3.00 மணிக்கு திருவிளக்குப்பூஜை நடைபெறும்.

அனைவரும் வருக! அன்னை அருள்பெறுக!

பிரம்மஸ்ரீ. ப. மகாகணபதி சர்மா
(ஆலய தர்மகர்த்தா)

விளம்பர அன்பளிப்பு;
வெ. இராஜகோபால சர்மா
மட்டுவில் தெற்கு.
(சி/4339)



பிரதிக்கு முந்துங்கள்!
தென் இந்திய வார மாத சஞ்சிகைகள்
விற்பனையாகின்றன.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (57731



லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
செவ்வாய், புதன்
பிரபுதேவா, சரத்குமார்
ரோஜா, மனோரமா
நடித்த
இந்து
வியாழன், வெள்ளி
விஜய், சுவாதி
விஷ்ணு
சனி, ஞாயிறு
முரளி, தேவயானி
பூந்தோட்டம்
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070 - 212223
(57502)



நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும் திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் காண்பிக்கப்படுகின்றன.
சுப்பர் ஸ்டார் ரஜனி
மீனா = செந்தில்,
வடிவேல் நடித்த
முத்து
(சினிமாஸ்கோப்)
காட்சிகள்:- 10-30, 2-30
(57725)



ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
மம்முட்டி - அஞ்சு
கோசி, மஞ்சுளா
விஷ்ணுவரதன் நடித்த
சத்திரிய வம்சம்
நாளை முதல்
கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா,
கவுண்டமணி, செந்தில்
நடித்த
இந்தியன்
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4334)



சிவா
வெண்திரையில்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
விஜய், கௌசல்யா
நடித்த
பிரியமுடன்
தினசரி:- 10-30, 2-30
(57733)



சரசாலை மத்தி அம்பாள் அறவழி
மழலைகள் கல்விப் பூங்காவின்
கட்டட நிதிக்காக நடத்தப்பட்ட
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
முடிவுகள்

19-07-98 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டுக்களின் முடிவுகள்;

1 ஆம் பரிசு - இல. 2583
2 ஆம் பரிசு - இல. 1045
3 ஆம் பரிசு - இல. 2513

ஆறுதல் பரிசுகள்;-
இல. 2816 இல. 0781
இல. 2766 இல. 3382
இல. 2840

பரிசுப் பொருள்களை 31-07-1998க்கு முன் பெற்றுக்கொள்ளவும்.

— அபிவிருத்திச் சபையினர்.
(சி/4337)


திங்களொன்று கழிந்தது ...!

மண்ணில்
02
—
08
—
1922



விண்ணில்
21
—
06
—
1998

திருமதி
**செல்லையா பாக்கியம்**
(கோண்டாவில்)

அன்பெனும் ஜோதியாய் மிளிர்ந்த எம் அன்னையே!
ஆறு தரும் விருட்சமாய் நின்று நிழல் தந்தாய் — உன்
அடிதனைப் பணிந்து அருளினை அருந்தி
இனித்திருந்தோம்
அரவம் இன்றி அம்பெனக் கடுகி விரைந்த கூற்றம்
அந்தரத்துனை ஒளித்து அழைத்துச் செல்ல
உன்னைத் தேடி
ஆற்ற முடியாத் துயரில் நாம் திங்கள் ஒன்று தீர்ந்தும்
அகலவில்லை உன் நினைவு அதனால் எழுதி வைத்
தோம் — ஏட்டில்...!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மகன்மார், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.
(57718)


வாழ்த்துகின்றோம்
இலங்கைக் கலாசார அமைச்சின்
"கலாபூஷணம்"
தேசிய விருது பெறும்
நவாலியூர்
நா. செல்லத்துரை B.A.
அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.
செ. சதானந்தன் குடும்பத்தினர்
ஜோ. ச. சத்தியநாதன் குடும்பத்தினர்
(57723) (அல்வாய்)


கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
சி. ஜெயராஜன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கமலாம்பிகை சிவபாதசுந்தரம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் வருட A பிரிவு மாணவர்கள்,
விஞ்ஞான பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(57732)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் படுகொலைப் பின்னணியில்
# சீ.ஐ.ஏ, மொஸாட், விடுதலைப்புலிகள்

## ஜெயின் அறிக்கையில் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 21

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலையின் பின்னணியில் அமெரிக்காவின் சி. ஐ. ஏ., இஸ்ரேலின் மொஸாட், விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியன உள்ளன என்று ஜெயின் கமிசனின் இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயின் கமிசனின் விசாரணை தொடர்பான அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மதன்லால் குரானா இந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

17 அத்தியாயங்களுடன் ஆயிரம் பக்கங்கள் கொண்டதாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ஐ-3)

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு தமிழகத்தில் இருந்து விக்கிரகங்கள்

## புனர் நிர்மாணப்பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்திற்குத் தமிழகத்தில் இருந்து விக்கிரகங்கள் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வன்செயல் சம்பவங்களினால் இந்த ஆலயத்தில் இருந்து பல விக்கிரகங்கள் காணாமற் போயின. சில விக்கிரகங்கள் சேதமடைந்தன.

இவற்றுக்குப் பதிலாக ஒரு தொகுதி விக்கிரகங்களே தமிழகத்தில் இருந்து எடுத்து வரப்படவிருக்கின்றன.

இலங்கையிலேயே முதல் தடவையாக நவக்கிரகங்கள் பாரியார் சகிதம் இருக்கும் விக்கிரகங்கள் இங்கு பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன.

அதே நேரம் — இத் தேவஸ்தானத்தின் புனர்நிர்மாணப் பணிகள் கடந்த வாரம் சம்பிரதாய பூர்வப்படி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வைபவத்தில் ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் உட்படப் புனர்நிர்மாணக் குழுப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

ஆலயத்தின் உட்பிரகார வேலைகளை முடித்து கும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலயப் புனரமைப்புக்கு அரசாங்கம் 40 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

# பாடசாலை மாணவருக்கு விளையாட்டு உபகரணம்

## 'யுனிசெவ்' விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்க 'யுனிசெவ்' அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், பட்மிட்டன், கரம் ஆகிய விளையாட்டுக்களுக்குத் தேவையான உபகரணங்கள் அடங்கிய நூறு தொகுதிகளை அந்த அமைப்பு இங்கு எடுத்துவந்துள்ளது. இந்த உபகரணங்களை பாடசாலைகளுக்கு வழங்கும் பணி தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'மாணவர் மத்தியில் விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதும், மாணவர்களிடையே குழு ஒற்றுமையை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டே இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன' என்று அந்த அமைப்பின் யாழ். திட்ட அதிகாரி திருமதி பென்னி புறூனி தெரிவித்தார். (ஐ-3-ற)

## குளம், வாய்க்கால்

# புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுவோருக்கு உணவு

யாழ். மாவட்டத்தில் பெரியளவில் சேதமடைந்துள்ள குளங்கள், வாய்க்கால்களை புனரமைக்கும் பணியில் இணைந்து செயற்படவுள்ளவர்களுக்கு வழங்குவதற்காக உலர் உணவுப் பொருள்கள் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

உலக உணவு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த உலர் உணவுகள் சம்பந்தப்பட்டோருக்கு வழங்கப்படவுள்ளன.

புனரமைப்புப் பணியில் ஈடுபடும் கூலியாள்களுக்கு விவசாய சம்மேளனங்கள் ஊடாக இந்த உலர் உணவு வழங்கப்படும். (ஐ-185)

# நாதஸ்வரம், தவில் இசை மக்கள் கலைகளாக மிளிர ஆதரவு தேவை

## மாதாந்த இசைவிழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 21

"பாரம்பரியமான நாகசுர தவில் கலைகள் ஒரு சமூகத்தின் சொத்து என்ற நிலை மாறி எல்லோரும் பின் பற்றக்கூடியதான மக்கள் கலையாக மிளிர வேண்டும் என நாம் விரும்புகின்றோம். இக் கலைகளை அருகிவிடாது பாதுகாக்கும் நோக்குடன் நாம் முன்வைக்கும் இந்த முயற்சிக்கு சகல தரப்பினரும் ஆதரவு தரவேண்டும்."

இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் மாதாந்த இசை நிகழ்வு இணுவில் இளந் தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெற்ற சமயம் அதற்கு தலைமை வகித்து உரையாற்றிய இசைவேளாளர் சங்கத் தலைவர் எஸ். ஆர். ஞானசுந்தரம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

பரம்பரை பரம்பரையாக நாதஸ்வர தவில் கலைகளை குறிப்பிட்ட ஒரு சமூகமே பின் பற்றி வந்திருக்கிறது. அதை ஒரு தொழிலாகவும் கொண்டிருந்தனர். ஆனால் இப்போது இக்கலைகளை பின் பற்றி பேணுவோர் எண்ணிக்கை எமது சமூகத்தில் குறைந்து கொண்டே போகிறது. அவர்கள் வேறு முயற்சிகளிலும் நாட்டம் கொள்கிறார்கள். இதனால் இக்கலைகளை எதிர் காலத்தில் பேணி வளர்க்க நாம் இப்பொழுதிலிருந்தே முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. இக்கலைகளை எல்லோரும் பின்பற்றக் கூடியதாக ஏற்பாடுகள் செய்வதற்கு ஆதரவளிக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

முன்பு இக்கலைகளை குருகுல முறைப்படி பயில வேண்டியிருந்ததால் அதனை எல்லோரும் பயில முடியவில்லை. யாழ். அரசாங்க செயலகம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியவற்றின் பேருதவியால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஒரு நாகசுர-தவில் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் ஏற்பட்ட அனர்த்தங்களால் அது செயற்பட முடியாமல் போய்விட்டது. ஆகவே இக் கலைகளை சகலரும் பயிலக் கூடியதான பயிற்சி வகுப்பு ஒன்றை ஆரம்பிக்க சகல தரப்பினரும் ஆதரவு நல்க வேண்டும். இங்கு பயில்வோருக்கு பல்கலைக்கழக மட்டத்திலான அந்தஸ்து கிடைக்க வழி செய்ய வேண்டும் — என்றார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இணுவில் கிராம சேவையாளர் க. இரவீந்திரன் —

தெய்வீகக்கலைகளான நாகசுர-தவில் கலைகளை அழியாது பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் — எனக் கேட்டுக்கொண்டார்.

மேற்படி இசை நிகழ்வில் மானிப்பாய் கண்ணன், இணுவில் கோ. இரத்தினகுமார் குழுவினரின் மங்கள இசையும், சங்கீத பூஷணம் கே. ஆர். நடராசாவின் கர்நாடக இசைக்கச்சேரியும் இடம் பெற்றன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

### ஒடியற் கூழ் விற்பனை

வடமராட்சி, ஜூலை 21

பருத்தித்துறை சத்துணவுக் கூடத்தில் ஒடியற் கூழ் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பிரதி புதன், சனிக் கிழமைகளில் தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வரும் ஒடியற் கூழ் ஒரு கோப்பை 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (ஐ - 173)

### புதிய பாலர் பாடசாலை

நெல்லியடி, ஜூலை 21

துன்னாலை தெற்கில் புதிய பாலர் பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் நடவடிக்கையினால் இக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது. (ஐ-8-109)

### பாராட்டு விழா

சாவகச்சேரி நகரப் பிரிவு கிராம அலுவலர் வைத்திலிங்கம் இராசரத்தினம் தரம் 1-க்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி சாவகச்சேரி ஸ்ரீ பழநி ஆண்டவர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினர் நடத்தும் பாராட்டுவிழா இன்று செவ்வாய் பி. ப. 4.30 மணிக்கு கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் சி. ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-117)

### விளையாட்டு உபகரணம்

செம்பியன்பற்று, ஜூலை 12

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் உள்ள ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலைக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-36)

### நவீன பற்சிகிச்சை உபகரணங்கள்

பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் நவீன வசதிகள் கொண்ட மின்சாரத்தில் இயங்கக்கூடிய பற்சிகிச்சை உபகரணங்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இக் கருவிகள் ஆஸ்பத்திரி பற்சிகிச்சைப் பிரிவில் பொருத்தப்பட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுவதாக வைத்தியசாலை பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் வீ. ஆர். டேவிட் தெரிவித்தார். (ஐ-117)

### பிரியாவிடை வைபவம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களுக்கான பிரியாவிடை வைபவம் நீதிபதி மு. திருநாவுக்கரசு தலைமையில் நீதிமன்றக் கட்டடத்தில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது.

மல்லாகம் நீதிமன்ற பதிவாளராக கடமையாற்றிய க. வாரித்தம்பி, முதலியாராகக் கடமையாற்றிய எஸ். விக்கினேஸ்வர மூர்த்தி ஆகியோருக்கே பிரியாவிடை வைபவம் நடத்தப்பட்டது. (ஐ-5-6)

### இந்து இளைஞர் மன்றம் அமைப்பு

நெடுந்தீவு, ஜூலை 21

நயினாதீவில் இந்து இளைஞர் மன்றம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் இந்து இளைஞர் மன்றத்தலைவர் வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இ. க. உருத்திரகுமார் தலைவராகவும், செயலாளராக க. ஜீவசீலனும் தெரிவு செய்யப்பட்டனர். மன்றத்தின் போஷகராக நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவல் சபைத் தலைவர் ஆ. தியாகராசா நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-111)

### சாய்ப்புச் சட்ட அமுல்

வலி.தெற்கு, ஜூலை 21

சுன்னாகம் வர்த்தகர் சங்கம். மருதனார்மடம் வர்த்தகர்சங்கம் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் சாய்ப்புச் சட்டம் தற்போது அமுல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி வர்த்தகசங்கங்களின் பிரிவுகளுக்குட்பட்ட சுன்னாகம், மருதனார்மடம், இணுவில், உடுவில் போன்ற இடங்களில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் சனிக்கிழமைகளில் பிற்பகலிலும், ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் முழுநாளும் மூடப்பட்டு வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது. (ஐ-152)

### நியமனம் கிடைக்கவில்லை

தென்மராட்சி, ஜூலை 12

ஆசிரிய நியமனப் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பளைப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பேருக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இந்த இருவருக்கும் இதுவரை நியமனங்கள் வழங்கப்படாதது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### நெசவு நிலையம் திறக்கப்படும்

அராலி தெற்கு பகுதியில் நீண்டகாலமாக இயங்காமல் இருக்கும் கைத்தறி நெசவு நிலையத்தை மீண்டும் புனரமைத்து யுவதிகளுக்கு கைத்தறி நெசவுப் பயிற்சி வழங்க வலி. மேற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. (ஐ-12)

### கிளைக்குழு தேர்தல்

வடமராட்சி, ஜூலை 21

கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கக்கிளைக்குழுத் தேர்தல் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறும். (ஐ-173)

சாவகச்சேரி பெருங்குளம் கல்வயல்

# வீரகத்தி விநாயகர் ஆலயம்

# அறிவித்தல்

1. 19-07-98 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு (தற்காலிக) நிர்வாக சபை கலைக்கப் பட்டது. பொதுக்கூட்ட அறிவித்தல் பின்பு அறி விக்கப்படும்.
2. தொடர்ந்து ஆலய பிரதம குருவாக சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் கடமையாற்றுவார் என்பதை அறியத்தருகின்றேன்.

வே. பாலசுப்பிரமணியம்.
தர்மகர்த்தா
பரிபாலன சபைத்தலைவர்.

கல்வயல்,
சாவகச்சேரி.

(57726)

---

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்க கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான

# கிளைப் பொதுக் கூட்டங்கள்

## 1998-08-01

வடக்கு – கிழக்கு மாகாண நிர்வாக எல்லை யுள் இயங்கும் ப.நோ. கூ. சங்கங்களின் துணை விதி 23 இன் கீழ் வட கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளருக்குரித்தாக்கப்பட்டும், இலங்கை சன நாயக சோசலிசக் குடியரசின் 98-05-19 ஆம் திகதிய 1028/6 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளி யிடப்பட்டதுமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய் வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைய கிளைப் பொதுக் கூட்டங்கள் 98-08-01 ஆம் திகதி நடை பெறும்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமுக மளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர் களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவல ரால் ஏற்கனவே அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களி லும் பொது அறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களுக்கு இவற்றைப் பார்வையிடவும்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களில் சமுக மளித்து வாக்களிக்க உரித்துடைய உறுப்பினர்களைக் குறித்த அறிவுப்புகளின் படி சமுகமளித்து தங்கள் சனநாயக உரிமைகளை நடை முறைப்படுத்தி கூட் டுறவு இயக்கத்தினை சனநாயக ஆளுமை கொண்ட தாக செயற்படுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள் கின்றேன்.

செ. கு. சண்முகநாதன்
கூ. உ. ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/ 4332)

---

# நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



# அமரர் தம்பர் சின்னத்தம்பி

தோற்றம் 24-07-1909 — மறைவு 21-06-1998

அன்பாலே எமை வளர்த்த தந்தையே
ஆதரவாய் எமை அணைத்த மாமாவே
இன்னலிலும் சீராட்டிய அப்புவே
ஊரினிலே சிறப்பாக வாழ்ந்தாயே
ஏன் எம்மை தவிக்கவிட்டுச் சென்றீர்?
உமை உலகம் உள்ளவரை மறவோமே!

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண் டவருக்கும், உதவிகள் பல புரிந்தோர்க்கும் நன்றி கள் கூறுவதுடன் இன்று (21 - 07 - 98) நடை பெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத் திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உற வினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக் கொள் கின்றோம்.

-குடும்பத்தினர்

தொட்டிலடி, சங்கானை.

[57724)

---

ADMISSION OF PUBLIC OFFICERS FOR THE DEGREE PROGRAMME (1998/99)

**ADMISSION TO THE B. Sc (AGRICULTURE) DEGREE COURSE 1998/99 UNDER SPECIAL PROVISIONS**

Application will be entertained by the Dean, Faculty of Agriculture, University of Jaffna, for Admission of Public Officers for Degree Programme to follow B. Sc. Agriculture as internal students for the Academic year 1998/99.

The applicants should have the following qualifications:

1. At least passes in 3 subjects in the G. C. E. (A/L) Examination, at one sitting in any of the following subjects:-
   a) Botany,
   b) Zoology,
   c) Chemistry,
   d) Physics,
   e) Agriculture

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND
2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognised institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course,
4. Age: Candidate should be less than 45 years of age at the time of closing date for applications.

Application forms mey be obtained from the Assistant Registrar, Exams and Addmissions Branch, University of Jaffna, on a payment of Rs 20 each, at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs. 20 drawn in favour of the Bursar, University of Jaffna, Thirunelvely, and a self addressed stamped envelop (for Rs. 2/50) not less than 9''x4'' size,

Date of closing is 01 - 09 - 1998.

Please note that session for these students will commence on 01-10-1998.

Application should be forwarded through the relevant Heads of Department.

Selected candidates will be called to sit for a written test and an Oral Examination.

No applications will be entertained after the closing date of applications.

Registrar

15-07-1998

(C/4328)

---

## மந்துவிலில் கூ. சங்க கிளை

இரண்டு வருட இடை வெளிக்குப் பின்னர் கொடி காமம் பல நோக்குக் கூட் டுறவுச் சங்கத்தின் மந்துவில் கிழக்கு கிளைக் கடை கடந்த வாரம் மீண்டும்திறக் கப்பட்டுள்ளது.

இதுவரை நாளும் இக் கிளை நிலையம் மந்துவில் பகுதியிலிருந்து மூன்று மைலுக்கு அப்பால் உள்ள கொடிகாமம் நகரப் பகுதியி லேயே இயங்கி வந்தது.

(ஐ–117)

---

# காரைநகர்

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## பதவி வெற்றிடம்

நிரப்புவதற்கான

# விண்ணப்பம் கோரல்

**1. பொது முகாமையாளர்**

சம்பள அளவுத் திட்டம்:
165/88 - 08 - 31/97 3450 — 5650
100x10— 120x10

தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்தில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம் முகாமைமட்டத்தில் உள்ளவர் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் ஆறு வருடத்திற்கு குறையாத முகாமை மட்டத்தில் அனுபவம்

அல்லது

(ஆ) பட்டதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர் அங்கீகரிக்கப் பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவன மொன்றில் முகாமை மட்டப் பதவியில் நான்கு வருட கால அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவு உயர்தரப் பத்திரம் அல்லது க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங் களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த் தக கைத்தொழில் நிறுவனமொன்றில் ஆறு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**2. கணக்காளர்**

சம்பள அளவுத் திட்டம்:
165/88 - 09 - 31/97 3200 — 5200
90x10 — 110x10

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/ உட்துறைக் கணக் காய்வாளர் பதவியில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத் திட்டத்தில் உட்துறைக் கணக்காய்வாளர்/ கணக்குப் பதிவாளர்/ கணக்காளர் அல்லது எண் ஆய்வு லிகிதர் பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையை நிறைவு செய்தும், நான்கு வருடம் குறையாத மேற் பார்வை மட்டக் கணக்குப் பகுதியில் அல்லது எண் ஆய்வுப் பகுதியில் அங்கீகரிக் கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவன அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த (உயர்தரத்தில்) கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங் களில் சித்தியும் கணக்குத்துறை/ எண் பார்வை துறையில் மேற்பார்வை பதவியில் ஆறு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**3. வர்த்தக முகாமையாளர்**

சம்பள அளவுத் திட்டம்: 165/88 - 10- 3100 - 4900
80 x 10 - 100 x 10

தகைமைகள்

(அ) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 165/88 — 11 ஆம் இலக்க சம்பளத்திட்டத் தில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனு பவமுள்ள முகாமைமட்டம் அல்லது மேற் பார்வை மட்டம், வர்த்தக துறையில் அல் லது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு வின் 165/88 — 12 ஆம் இலக்க சம்பளத்திட் டம் பெற்றவர்

அல்லது

(ஆ) வர்த்தகம்/ விற்பனை/ நிர்வாகம்/ பொருளி யல் விசேட பட்டம் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக் கழகத்தில் பெற்றவர்

அல்லது

(இ) கூட்டுறவு உயர்தரப் பத்திரம்/ க. பொ. த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தி பெற்று மேற்பார்வை மட்டத்தில் நான்கு வருட அனுபவம், சந்தைப் படுத்தல்/ விநி யோகம்/ ஏற்றுமதி/ இறக்குமதி செய்த அங் கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறு வனத்தில் அனுபவம் பெற்றவர்.

**4. வயதெல்லை**

21 தொடக்கம் 45 வரை

5. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர் களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடைய தாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக் காக விண்ணப்பிக்கும் போது தமது விண் ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தி னூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராக ரிப்பதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அதுவெளிப்படுமிடத்து நியமனத்தை இல் லாது ஒழிப்பதற்கும் வழிவகுக்கும்.

விண்ணப்ப முடிவுதிகதி 1998 - 08 - 10

தலைவர்
காரைநகர் ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.

(57719)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# பொலீஸ், நீதிமன்ற அழைப்பாணை கிராம அலுவலர் மூலம் விநியோகம்

மட்டக்களப்பு, ஜூலை 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸ், நீதிமன்ற அழைப்பாணைகளை விநியோகிக்கும் பொறுப்பு கிராம சேவை அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச கிராம சேவை அலுவலர்கள் உட்பட சகல கிராமசேவை அலுவலர்களுக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனியன்று மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் தலைமையகப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் றொஹான் உபசேன மட்டக்களப்பு, வவுணதீவு, ஆரையம்பதி பிரதேச கிராமசேவை அலுவலர்களைச் சந்தித்து இது பற்றி விளக்கினார்.

சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் பொறுப்புகளிலிருந்து கிராம சேவை அலுவலர்கள் ஒதுங்கி விட முடியாது.

நீதிமன்றம், பொலீஸ் அழைப்பாணைகள்இனிமேல் கிராம சேவை அலுவலர்கள் தான் விநியோகம் செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (இ-21)

### சார்க் மாநாடு:

## 5 ஆயிரம் பொலீஸார் பாதுகாப்புக் கடமையில்

கொழும்பு, ஜூலை 21

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெற உள்ள சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு வரவுள்ள வெளிநாட்டுத் தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு சுமார் ஐயாயிரம் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

பாதுகாப்புக் கடமைகளுக்குப் பொறுப்பாக சிரேஷ்ட பிரதி பொலீஸ் மா அதிபர் கிங்ஸ்லி விக்கிரமசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐயாயிரம் பொலீஸாருக்கு மேலதிகமாக தேவைப்படுமானால் முப்படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

அதேசமயம் இப்பொழுது முதலே கொழும்பு நகருக்குள் வரும் நுழைவாயில் பகுதியில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தெஹிவளைபாலம், விக்ரோறியாபாலம், பேலியகொடைப்பாலம் ஆகியவை உட்பட பல இடங்களில் மோப்ப நாய்களின் துணையுடன் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக சார்க் மாநாடு நடைபெற உள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு அருகிலுள்ள அரச உயரதிகாரிகள், நீதித்துறை அதிகாரிகள் ஆகியோரின் வீடுகளும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. (இ-9-)

## ஆசிரியர் வரதராஜன் விடுதலை

யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பொருளியல் ஆசிரியர் வரதராஜன் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த மார்ச் 23 ஆம் திகதி முதல் மார்ச் 28 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் முத்துக்குமாரசாமி ஸ்ரீதரன் என்ற விடுதலைப்புலி உறுப்பினர் பற்றிய தகவலைக் கொடுக்கத் தவறினார் என்று இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை இவர் ஏற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து நீதிபதி நிமால் திஸநாயக்க பாதுகாப்பு நிதியாக 50ஆயிரம் ரூபாவை செலுத்துமாறு அவருக்கு உத்தரவிட்டார். தவறும் பட்சத்தில் 6 மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி தமது தீர்ப்பில் கூறினார்.

பாதுகாப்பு நிதிக்கு வழங்க உத்தரவிடப்பட்ட 50ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டதை அடுத்து அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார். (ஐ-6)

## யோக-தியான பயிற்சியில் சித்தியடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ். மெடிக் சென்ரரினால் இலவசமாக நடத்தப்பட்டு வந்த யோக—தியான பயிற்சியில் கலந்து கொண்டு சித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 31ஆம் திகதி கொழும்பில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் 38 ஆவது மாற்று வைத்திய உலக விஞ்ஞான மாநாட்டில் வைத்து வழங்கப்படவுள்ளன.

பேராசிரியர் வைத்திய கலாநிதி அன்ரன் ஜயசூரியா இச் சான்றிதழ்களை வழங்குவார்.

பயிற்சிகளை ஒழுங்கு செய்து நடத்திய பரீட்சையாளர் வைத்திய கலாநிதி வீ. ஸ்ரீ குக சிவலோகநாதன் இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

வைத்திய கலாநிதி கே. கமால் பயிற்சியளித்த பயிற்சியாளர்களில் சித்தி பெற்றவர்களின் பெயர் விவரம் வருமாறு;

★ அதி சிறப்பு விருது பெறுபவர் பங்குத்தந்தை எறிக் றொஷான் (ஆனைக் கோட்டை)

★ யாழ். பங்குத்தந்தை தேவசகாயம்.

★ அ. சம்சன் (தொழில் நுட்பக்கல்லூரி).

★ வி. சஞ்சீவ் (கொக்குவில் இந்துக்கல்லூரி).

★ பா. பாலமகிந்தன் (தொழில் நுட்பக்கல்லூரி).

★ கே. என். முகுந்தன் (யாழ். பல்கலைக்கழகம்).

★ சி. செந்தூரன் (யாழ். மத்தியகல்லூரி).

★ சி. ராஜ்குமார் (யாழ். இந்துக்கல்லூரி).

★ செல்வி சி. சிவகாமரூப சுந்தரி (வேம்படி மகளிர் உயர் பாடசாலை).

★ பா. மயூரன் (தொழில் நுட்பக்கல்லூரி).

★ செல்வி ரா. ஜெயரஞ்சினி (விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்).

★ செல்வி பூங்குழலி (ஆசிரியை, மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை).

★ சி. சிவதேவகுமார் (கொக்குவில்).

★ பி. சுகிர்தன் (கொக்குவில்).

★ பாலசூரியன் (கொக்குவில்).

★ பி. ராஜீவ் (கொக்குவில்).

★ எஸ். அகிலா (கொக்குவில்),

★ கே. பிரேம்குமார் (கொக்குவில்).

★ திருமதி கனகேஸ்வரி (கொக்குவில் மாதர் கழகம்). (ஐ-ரீ)

## நல்லூர்ப் பிரதேசத்தில் 3 போசாக்குத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 21

திட்ட அமுலாக்கல் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சினால் இந்த வருடத்திற்கான போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில 3 திட்டங்கள் அமுல்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதியோருக்கான போசாக்கு நிகழ்ச்சித்திட்டம், பாடசாலை சிறுவர்களுக்கான போசாக்குத் தொடர்பான கருத்தரங்கு, முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தாய்மார்களுக்கான போசாக்குத்திட்டம் என்பனவே அமுல்ப் படுத்தப்படவுள்ள திட்டங்களாகும்.

நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இந்த போசாக்குத் திட்டத்தை அமுல்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (ஐ-7)

### அச்சுவேலிப் பகுதியில்

## பாவனைக் காலம் முடிந்த பொருள்கள் விற்பனை

அச்சுவேலிப்பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பாவனைக் காலம் முடிவடைந்த உணவுப் பொருள்கள் விற்பனையாகின்றன. மிகவும் ஆபத்து விளைவிக்கக் கூடிய உணவுப் பொருள்கள் சாதாரணமாக விற்பனை செய்யப்படுவது பாவனையாளர்களைக் கவலை கொள்ளச் செய்துள்ளது.

பாவனைக் காலம் முடிவடைந்த ரின்பால், பிஸ்கட் வகை மற்றும் உணவுப் பொருள்கள் சில வியாபார நிலையங்களில் விற்பனையாவது பாவனையாளர்களால் அவதானிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

## பீடைகொல்லி விதிகளை மீறினால் நடவடிக்கை

### உத்தியோகத்தர் நியமனம்

திருநெல்வேலி ஜூலை 21

யாழ். மாவட்ட உணவு மருந்துப்பரிசோதகர் த.மகாதேவன் விவசாயத் திணைக்களத்தின் யாழ். மாவட்டத்திற்கான பீடை கொல்லிச் சட்ட விதிகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகவும் இம் மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டம், 1994 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க திருத்தப்பட்ட பீடை கொல்லிகள் சட்டம் ஆகியவற்றின் விதிகளுக்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள விவசாயத் திணைக்கள பீடை கொல்லிப் பதிவாளர் இவருக்கு இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் உணவு, மருந்துப்பரிசோதகராக கடமையாற்றி வரும்இவர் தமது கடமைகளுடன் மேலதிகமாக பீடைகொல்லிகள் சட்ட விதிகளை இங்கு நடைமுறைப்படுத்தும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகவும் பணியாற்றி வருகிறார். (ஐ-135)

## புத்தளத்தில் மழையினால் உப்பு உற்பத்தி பாதிப்பு

கொழும்பு, ஜூலை 21

நாட்டின் மேற்கு, தென் மேற்கு கரையோரங்களில் பெய்து வரும் அடை மழையினால் புத்தளத்தில் உப்பு உற்பத்தித் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்த மழையினால் சுமார் நான்கு கோடி ரூபா பெறுமதியான உப்பு அடித்துச் செல்லப்பட்டுள்ளது. புத்தளம் உப்பு நிறுவனம் மட்டும் சுமார் 5 ஆயிரம் தொன் உப்பை இழந்துள்ளது.

நிறுவனத்தின் பாலாவிஉப்பளத்தில் இருந்து பெறப்படும் உப்பில் அது ஐந்தில் ஒரு பங்கு ஆகும். சிறிய அளவில் உப்பை உற்பத்தி செய்யும் சுமார் 300 உப்பள உரிமையாளர்களும் இந்த மழையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-9)

### சுயதொழில் வாய்ப்பு வசதியை வழங்க

# கணவரை இழந்த பெண்கள் விவரம்; 'யுனிசெவ்' அமைப்பு சேகரிக்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 21

கடந்த கால வன்செயல்கள் காரணமாகக் கணவன்மார்களை இழந்து விதவையாக உள்ள பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புப் பெற உதவி வழங்கும் திட்டம் ஒன்றை 'யுனிசெவ்' அமைப்பு நடைமுறைப் படுத்தவுள்ளது.

யுனிசெவ் அமைப்பின் யாழ். திட்ட அதிகாரி திருமதி பென்னி புறூனி மேற்கண்டதகவலைத் தெரிவித்தார்.

இந்த விதவைப் பெண்களின் குடும்பநிலை, அவர்களுக்கு எந்த வகையான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பன தொடர்பாக கிராமசேவையாளர்கள் மூலமாகப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு குடும்பங்களும் தனித்தனியாகப் பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்கு ஏற்ற விதத்தில் உதவி வழங்கப்படும்.

அத்துடன் கணவனைப் பிரிந்து வாழும், கணவன்மார் காணாமற் போன காரணத்தால் தனிமையில் வாழும் பெண்கள் தொடர்பான விவரங்களும் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கு உதவி வழங்கவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3-ரி)

## நினைவுப் பதிவேடு வெளியீடு

வலி. தென்மேற்கு, ஜூலை21

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 175ஆம் ஆண்டு நிறைவினையொட்டி "கடந்தகால நினைவுப் பதிவேடு" ஒன்றினை கொழும்பு பழைய மாணவர் சங்கம் வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் முதலாவது அதிபர் வண. டானியல் புவர் அவர்களின் அட்டைப்படத்துடன் பதிவேட்டுப் புத்தகம் (SOUVENIR) வெளியிடப்பட்டுள்ளது.

இதில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் சோன் ஈ. டொன்லி, கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர் எம். தவயோகராஜா, யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ஜி. இராஜநாயகம், பேராயர் எஸ். ஜெபநேசன் ஆகியோர் ஆசிச் செய்திகளை வழங்கியுள்ளனர். (ஐ-185)

### கட்டாயக் கல்வித் திட்டம்:

## பாடசாலைகளில் கண்காணிப்புக் குழு

வலி.தெற்கு, ஜூலை 21

14 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் யாவருக்கும் கட்டாயக் கல்வி அளிக்கப்படல் வேண்டும் என்ற கல்வி அமைச்சின் திட்டத்துக்கமைய கட்டாயக் கல்விச் செயல்திட்டம் பாடசாலை தோறும் அமுல்படுத்தப்பட உள்ளது.

இதற்கென கண்காணிப்புக் குழுக்கள் பாடசாலைகள் தோறும் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கண்காணிப்புக் குழுக்களைச் சேர்ந்தோர் பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் தங்கியுள்ள 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கண்டுபிடித்து, அவர்களின் பெற்றோருடன் கலந்துரையாடி பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதில் ஈடுபடுவர். கல்விச் செயற்பாடுகளுக்கு பெற்றோரின் உதவிகளையும் இக் கண்காணிப்புக் குழுக்கள் பெற்றுக் கொடுக்கும்.

இக் கண்காணிப்புக் குழுக்களில்பாடசாலைஅதிபர்கள் கிராம சேவையாளர்கள், மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் போன்றோர் அடங்கியிருப்பர் (ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலகத்துக்கு தொலைபேசி

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் உத்தியோக பாவனைக்கென தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளதால் யாழ். செயலகத்துடனான உத்தியோக தொடர்புகளை இலகுவில் மேற்கொண்டு தேவைகளை விரைவில் பூர்த்தி செய்ய முடிவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-152)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 — 07 — 1943

மறைவு 25 — 07 — 1995

### செல்லையா சண்முகநாதன்

(ஆசிரியர்)

திதி: 21-07-1998

எங்கள் அன்புத் தெய்வமே அப்பா! நீங்கள் வாழ்வில் வேதனைகளை அனுபவித்தீர்கள், மகிழ்ச்சி பொங்கும் வேளையில் காலன் திடீரென உங்களைப் பறித்துவிட்டான். மறக்க முடியவில்லையே தவிக்கின்றோம்.

பிரிவால் வாடும்:

இணுவில்.

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

(57689)

## அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பு



சென்ற 21 — 06 — 98 அன்று இறைவனடி சேர்ந்த

அமரர்

### செல்லையா மாணிக்கம்

(இ. போ. ச. சாரதியும், வாகன உரிமையாளரும்,)

தோற்றம் 24 — 09 — 1930

மறைவு 21 — 06 — 1998

அவர்களின் 31 ஆம் நாள் கிரியைகள் இன்று காலை 11. 30 மணியளவில் எமதில்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்வுகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது

மனைவி மா. குலமணி,

சகோதரர் செ. சரவணமுத்து (கணேஸ்)

புகையிரத வீதி,
கொடிகாமம்.

(57677)

# மாகாணசபை வேண்டாம்; மாவட்ட நிர்வாகம் போதும்

## சிங்கள ஆணைக்குழு அறிக்கை

கொழும்பு, ஜூலை 21

★ தற்சமயம் நடைமுறையில உள்ள மாகாணசபை நிர்வாக முறை ஒழிக்கப்பட வேண்டும்.

★ அரசமைப்பின் 13 ஆவது சட்டத்திருத்தம் ரத்துச் செய்யப்பட வேண்டும்.

★ இன அடிப்படையில் எல்லைகளை மாற்றியமைக்கக் கூடாது.

★ மாவட்ட மட்டத்தில் அதிகாரங்களைப் பகிரும் தற்போதைய நிர்வாக முறையே தொடரப்பட வேண்டும்.

சிங்கள ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் மேற்கண்ட சிபார்சுகள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கடந்த சனியன்று தலதா மாளிகையில் வைத்து வெளியிடப்பட்டது.

மூன்று மகாநாயக்கர்களிடமும் இறுதி அறிக்கை கையளிக்கப்பட்டது.

இன்று இந்த அறிக்கை கொழும்பில் வைத்துப் பகிரங்கமாக வெளியிடப்படவிருக்கிறது.

(இ-3)

## மேல்மாகாணசபைத்தேர்தல்:

## தமிழ் சுயேச்சைக் குழு வீடு வீடாகப் பிரசாரம்

கொழும்பு, ஜூலை, 21

மேல்மாகாணசபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் ஆதரவு தேடி கருத்தரங்குகளை நடத்துவதுடன் வீடுவீடாகப் பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

டாக்டர் திலகஜோதி தம்பையா தலைமையிலான மக்கள் தமிழ்க்காங்கிரஸ் மற்றும் சில தமிழ் அமைப்புக்கள் இணைந்து சுயேச்சைக் குழுவாக இத்தேர்தலில் போட்டியிடுகின்றன.

முதன்மை வேட்பாளராக போட்டியிடும் தற்போதைய கொழும்பு மாநகரசபை உறுப்பினர் எஸ். ராஜேந்திரன் தலைமையில் முசுத்து வாரத்தில் கருத்தரங்கு ஒன்று கடந்த வாரம் நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் 'ரெலோ' முதல்வர் என். சிவாஜிலிங்கம், ரெலோ பிரமுகர் எஸ். ஸ்ரீகாந்தா உட்படப்பலர் உரையாற்றினர்.

(ஐ-3)

## விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு

வலிகாமம் தெற்கு, ஜூலை21

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவர்களின் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் முகமாக ஜேர்மன் தொழில் நுட்ப அமைப்பின் (ஜீ.ரீ. இசற்)யாழ்ப்பாண வதிவிடப் பிரதிநிதி ஸ்ரீபன் பெறுமதி வாய்ந்த விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கி உள்ளார்.

அதிபர் க. செல்வக்குமாரன் தலைமையில் வைபவரீதியாக நடைபெற்ற நிகழ்வில் விளையாட்டு உபகரணங்களை விளையாட்டுத் துறை பொறுப்பாளரிடம் திரு. ஸ்ரீபன் கையளித்தார்.

(ஐ-152)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

'உதயன்' நிறுவனம் மற்றும் யாழ்.றோட்டரிக்கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய் மாலை பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி—அரியாலை வி. க. எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் வி.க. (பெண்கள்).

★ மாலை 5 மணி—சென்றலைட் வி.க எதிர் யாழ்ப்பாணக்கல்லூரி அணி(ஆண்கள்).

(ஐ-ரீ)

## பாலர் ஆசிரியராக பயிற்சி

க. பொ. த. சாதாரண தரம் அல்லது மேல் தகைமை - தபாலில் ஆறு மாதங்களில் பயிலலாம்.

**பாலர் ஆசிரியர் சங்கம்**

20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(57649)

உ

## காரைநகர் ஈழத்து சிதம்பரத்தில் கருணை செய்யும் தெய்வங்கள்



**நடேசர்!**

சிதம்பரத்தில் ஆடியருள் புரிகின்ற
சின்மயனே! எங்கள் தில்லை நடேசா!
பதம் தொழுதே உனை போற்றி செய்கின்றோம்
பார்வதியால் பங்கனே தில்லை நடேசா!
நிதம் நிதம் உனை தொழு தேற்றுகின்றோம்
நிம்மதிகள் தந்திடுவாய் தில்லை நடேசா!
விதம் விதமாய் உனை தோத்தரிக்கின்றோம்
விடிவொன்று தந்திடுவாய் தில்லை நடேசா!

**ஐயப்பன்**

காரைநாட்டில் எழில் திண்ணபுரத்திலே
காத்தருள் செய்பவன் எங்கள் ஐயப்பன்!
பேரை நினைத்தே பெரும் நேர்த்தி செய்திட
பெரும் பாவம் தீர்ப்பவன் ஐயப்பன்!
தில்லைக் கூத்தனின் திக்கிலிருப்பவன் ஐயப்பன்!
தேடியழுபவர் துயரம் தீர்ப்பவன் ஐயப்பன்!
தொல்லை வினைகள் துரத்தி வைப்பவன் ஐயப்பன்!
தொன்மைத் தெய்வமாய் துணையிருப்பவன்
ஐயப்பன்!


'மதுரகவி'. காரை. எம் பி. அருளானந்தன்

இன்று நடைபெறும
ஈழத்து சிதம்பர மண்டலாபிஷேக
பூர்த்தி விழா சிறப்புற வாழ்த்துவோர்:

### மலர் புடைவையகம்

புடைவைத் தினுசுகளின் பொருத்தமான
புடைவையகம் மொத்த சில்லறை
வியாபார ஸ்தாபனம்.
இல. 18, (67/A).
பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

(57687)



## சாமியே சரணம் ஐயப்பா

ஈழத்து சிதம்பரத்தில் ஓர் ஆண்டி கேணி ஐயனார் எண்ணியதை திண்ணமுற செய்திடும்

அந்த

## ஐயனாருக்கும்சிவனுக்கும் இன்று மண்டலாபிஷேகம்

**இனிது நிறைவேற வாழ்த்துகின்றோம்**

மணிகண்டன் தாகசேவை நிலையம்

இல. 42/3, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(57703)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விசாரணையில் மனச்சுத்தம் தேவை

செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் தேசிய மனித உரிமை ஆணைக் குழு தனது கதவைச் சற்றுத் திறந்துள்ளது.

செம்மணி வெளியில் 300 தொடக்கம் 400 சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களைக் காண்பிக்க முடியும் என்று தெரிவித்த, [கிருசா]ந்தி கொலை வழக்[கின்] குற்றவாளியான [லான்]ஸ் கோப்ரல் சோம[ரத்ன] ராஜபக்சவை விசா[ரிப்ப]து என்ற முதற்கட்ட [நட]வடிக்கையில் இறங்க [ஆ]ணைக்குழு தீர்மானித்[துள்]ளது.

[அ]தாவது, ராஜபக்ச [தெ]ரிவித்த தகவல் சரி[யா]னதா; உண்மையிலேயே யாழ்ப்பாண இளைஞர், யுவதிகளின் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளனவா; என்பதனை உறுதி செய்யும் பணியில் ஈடுபட[வுள்]ளது.

[த]மக்குத் தண்டனை கிடைத்து விட்டது என்பதால் அரசாங்கத்தை மாட்டிவிடும் நோக்குடன் இப்படி ஒரு தகவலை அவர் வெளியிட்டிருக்கலாம்; கொலைகளைச் செய்த ஏனைய இராணுவத்தினர் தப்பிக்கொள்ள, அவற்றுக்குப் பொறுப்பாக இருந்த உயர், இடைநிலை அதிகாரிகள் தப்பிக்கொள்ள, தாம் மட்டும் தண்டனை அனுபவிப்பதா என்ற மன உணர்வினாலும் ராஜபக்ச இவ்வாறு கூறியிருக்கலாம்.

இத்தகைய சந்தேகங்களைப் போக்குவதற்கு ராஜபக்சவை விசாரித்து அவர் தெரிவித்த தகவல் சரியானது தானா என்று உறுதி செய்யவேண்டும் என்று ஆணைக்குழு கருதுகிறது. அதுஏற்றுக் கொள்ளக் கூடியதே.

ஆனால் இந்த விசாரணை எவ்வித வெளியார் தலையீடும் இன்றி, ராஜபக்ச மீது எவ்வித செல்வாக்கும் செலுத்தப்படாமல், அவர் பயமுறுத்தப்படாமல், நடத்தப்பட வேண்டும். விசாரணை செய்வதற்கு இன்னொரு சாராரை நியமிக்காமல், ஆணைக்குழு உறுப்பினர்களே அந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச வெலிக்கடைச் சிறைச்சாலையிலேயே வைக்கப்பட்டுள்ளார். உண்மையைச் சொல்லக் கூடாது என்று தடுக்கும் முயற்சிகளோ அவரைப் பயமுறுத்தும் நடவடிக்கைகளோ சிறைச்சாலைத் தரப்பினர்ஊடாக மேற்கொள்ளப்படாமல் பார்த்துக் கொள்ளப்படுவது மிக அவசியம்.

தாம் பிரச்சினையில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்பதற்காக புதைகுழி விவகாரத்தில் ஈடுபட்ட, பொறுப்புடைய இராணுவத்தினர் ராஜபக்சவின் மனதை மாற்றத் தம்மால் இயன்ற குறுக்கு வழிகளை நாடக்கூடும்.

ஆகவே ராஜபக்சவை விசாரணை செய்வது தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். உண்மையை வெளிக்கொணர வேண்டும் என்ற மனச்சுத்தத்துடன் அவர் விசாரிக்கப்பட வேண்டும். விசாரணை முழுக்க முழுக்கச் சுயேச்சையானதாக அமைய வேண்டும்.

தேசிய மனித உரிமை ஆணைக்குழு இத்தகைய விடயங்களில் கோணமாட்டாது; நிமிர்ந்து நின்று, நேர்மையாகச் செயற்பட வேண்டும்.

---

அடுத்த ஆண்டு தொடக்கம்

# ஜீ.சீ.ஈ. சாதாரணதரத்துக்கு ஆங்கிலம் கட்டாய பாடம்!

கொழும்பு, ஜூலை 21

அடுத்த வருடம் ஜனவரி முதல் ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சைக்கு ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தலை தேசிய கல்வி நிறுவகம் விடுத்துள்ளது.

கல்விச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்பட விருப்பதாகவும் —

இதற்காக ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட விருக்கின்றன என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் 9, 10, 11ஆம் ஆண்டுகளில் மூன்று வருடம் கல்வி பயில வேண்டிய தற்போதைய நடைமுறை மாற்றப்பட்டு 9 ஆம், 10 ஆம் வகுப்புகளில் இரு வருடங்கள் கல்வி பயின்று பரீட்சைக்கு தோற்ற வசதி செய்யப்படவிருக்கிறது.

எதிர்வரும் ஜனவரியில் அமுலுக்கு வரும் இந்த நடைமுறைப்படி 2000 ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இந்த வசதி கிடைக்கும்.

(ஐ-3)

## 500 பரல் பெற்றோல் கப்பலில் வந்தது

அரியாலை, ஜூலை 21

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் கப்பல் மூலம் பெற்றோலைத் தருவித்ததை அடுத்துப் பெற்றோலுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

சுமார் ஐந்நூறு பெற்றோல் பீப்பாய்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்தப் பெற்றோல் யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவியதை அடுத்து வெளிச் சந்தையில் அதன் விலை அதிகரித்திருந்தது.

(ஐ - 17)

அடை மழையினால்

## 10 ஆயிரம் குடும்பங்கள் தெற்கில் இடம்பெயர்வு!

தெற்கில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்யும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 10 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கம்பஹா, காலி, களுத்துறை மாவட்டங்களிலேயே மோசமானவெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்தப்பகுதிகளில் பலவீதிகளை வெள்ளம் மூடியுள்ளதால் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்துள்ளன.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் சனசமூக நிலையங்கள், ஆலயங்களில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.

சமூக சேவைகள் அமைச்சு அவர்களுக்கு உணவு வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

(ஐ-3)

### சமய சந்நிதிகளில்

நல்லூர், ஜூலை 21

திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீ காயாரோஹணேஸ்வரர் சுவாமி தேவஸ்தான (திருநெல்வேலிச்சிவன்)வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 8மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ஐ-111)

★ ★ ★

தென்புலோலி உபய கதிர்காம வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 5 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 6 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 7 ஆம் திகதி இரதோற்சவமும் இடம்பெறும்.

8 ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறுவதுடன் வருடாந்த அலங்கார உற்சவம் முடிவடையும்.

(ஐ-173)

★ ★ ★

கோண்டாவில்தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயிலில் இம்மாதம் எதிர்வரும் வியாழக்கிழமை ஆடி அமாவாசை உற்சவம் நடைபெறும்.

(ஐ-173)

---

# கல்வித்தரம் உயர உதவக்கூடாதா?

**ச. சதானந்தன்**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இன்றைய நிலைபற்றி அறியாதவர்கள், இங்குள்ளவர்களில் அதைப்பற்றிச் சிந்திக்காதவர்கள் எவரும் இருக்க முடியாது. முன்னைய யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பதும் கணிசமான தொகையினர் அறிந்தது தான்.

முக்கியமாக இம்மண்ணின் சொத்தாக இருந்தது கல்விதான். ஒரு சில வளங்களின் உதவியுடன், பெரும் பங்கான வளமாகக் கல்வியே இருந்தது. இது பற்றி பலரும் பேசியுள்ளார்கள், அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனினும் பலர் இதுபற்றிய விடயத்தில் இன்னும் கருத்தில்லாது இருப்பது மிகவும் வேதனையானது. இன்று மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. இது மின்சாரசபையினருக்கு கிடைத்துள்ள வசதிக்கேற்பவே நடைபெறுகிறது.

எனினும் க. பொ. த. (உயர்தர) மாணவரின் நன்மை கருதி நீடிக்கப்பட்ட நேர அளவில் மின்சாரம் வழங்க முன்வந்துள்ளார்கள். அதனை நாம் பாராட்டுகிறோம். மின்சாரவசதியில்லாத பகுதிகளிலுள்ள மாணவர்கள் பற்றி நினைக்கும்போது கவலையாகவும் உள்ளது. நிலைமை இவ்வாறிருக்க, அவர்களின் படிப்பிற்கான இடையூறுகள் சிலரின் நடவடிக்கைகளால் ஏற்படுவதை அவர்கள் உணராது இருப்பதையிட்டு என்ன சொல்வது?

**மக்கள் அரங்கு**

ஒருகாலத்தில் முதன்மையிடத்தில் இருந்த கல்வியின் தரம் இன்று இங்கு எவ்வளவு பின்னடைந்துள்ளது. முன்னர் பின் தங்கிய இடமெனக் கருதப்பட்ட காலி மாவட்டத்தில் 37 மாணவர்கள் சென்ற க. பொ. த. (சா. த) பரீட்சையில் அனைத்துப்பாடங்களிலும் சிறப்புச் சித்தி பெற்றுள்ளனர். இது யாழ். மாவட்டத்தினை முந்திவிட்டதாக ஒரு பத்திரிகையிலும் செய்தி வந்திருந்தது. இதில் பொறாமை கொள்ளத் தேவையில்லை. உண்மையில் வேதனை அடைகின்றோம். இதனை நாம் சிந்திக்கவேண்டாமா?

கடந்த பல ஆண்டுகளாகவே தொடரும் துயரங்கள் எமது மாணவரின் கல்வியை மழுங்கடித்து வருவதும், எமக்கு எவ்வித ஆதரவும் இல்லை என்பதும் அறிந்ததே. எனவே எமது பகுதி கல்வி வளர்ச்சிக்கு நாமே உழைக்கவேண்டும்.

ஆனால் நடப்பதென்ன?

க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ளன. இறுதி நேரத் தயாரிப்புக்களிலும், முடிக்கப்படாத பகுதிகளிலும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டிய நிலையிலிருப்பவர்கள். மிகவும் சிரமமான பாதைகள் ஊடாகவே, பல மனத்தாக்கங்களின் மத்தியில் இந்நிலையை அடைந்தவர்கள். மேலும் இப்பரீட்சையானது அவர்களின் வாழ்க்கையுடன் இணைந்த ஒன்றாகும்.

ஆனால் ஒரு சிலரின் நடவடிக்கைகளால் பல மாணவர்கள் சிரமப்படுவதை அவதானிக்க முடிகிறது. இரவு நேர அமைதியில் படிக்கும் மாணவர்களின் கவனத்தைக் குலைக்கும் வகையில் பெரிய ஒலியுடன், சினிமாப் படம் போடுவதும் ஒலி நாடாக்களை ஒலிக்க விடுவதும், பெரிய சத்தத்துடன் கூடிய உள்ளூர் மின்பிறப்பாக்கிகளைப் பாவிப்பதும், கூடியிருந்து சத்தம் செய்வதும் நடைபெறுகின்றன.

இவைகளைச் செய்யவேண்டாமெனச்சொல்லவில்லை. ஆனால் மற்றவர்களுக்கு இடையூறு செய்யாமல் மட்டுப்படுத்தலாமே. இது மட்டுமல்லாது, தரப்படும் குறைந்த வலு மின்சாரத்தினை வலுக்கூடிய உபகரணங்களைப் பாவிப்பதன் மூலம் மேலும் மங்கச் செய்யப்படுகிறது. குறைந்த ஒளியில் மாணவர்கள் சிரமத்துடன் படிக்க வேண்டியதுடன், அவ்வொளி கூடியும் குறைந்தும் வரும்போது கவனம் குறைந்து விடுகிறது. மிகவும் சிரமத்திற்கு மத்தியிலேயே நீடிக்கப்பட்ட நேரத்திற்கு மின் விநியோகம் செய்யப்படுகிறது. அது இம் மாணவரின் நன்மைக்காகவே. இதனை ஏன் உணர்கிறார்களில்லை? இப் பரீட்சை மாணவர்கள் மட்டுமல்ல, ஏனைய மாணவர்களும், பாடம் தயார் செய்யும் ஆசிரியர்களும், ஏன் ஏனையவர்கள் கூட படிப்பதற்கோ, முக்கிய விடயங்களைக் கவனிப்பதற்கோ சிரமப்படுகிறார்கள்.

எனவே கடந்த பல ஆண்டுகளாகவே இன்னலின் மத்தியில் வாழ்ந்து வரும் நாம் கிடைக்கூடிய வளங்களை வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும். எமது வருங்காலச் சந்ததியினரும் வாழ வேண்டும். அவர்களுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடுகளை நாமே வழி காட்டியாக இருந்து அறிவுறுத்த வேண்டும்.

மின்சார சபையினரும் தமது கடப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இடையிடையே அவர்கள் கண்காணிப்புச் செய்தல் வேண்டும்.

எமது சமுதாய நலன்கருதி நாமே செயற்பட வேண்டும். சீரான வாழ்க்கை முறையையும், ஒழுங்கையும் கடைப்பிடித்து வாழ்ந்தால் எமக்கும் நன்மை எதிர்காலத்தவருக்கும் நன்மை செய்வோமா?

---

## திருமலை அகதி முகாமில் பெண் தற்கொலை!

திருகோணமலை, ஜூலை 21

திருகோணமலை அலஸ் தோட்டம் அகதி முகாமில் தங்கியிருந்த பெண் ஒருவர் நோயின் கொடுமை தாங்காது தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு திரியாயில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியா சென்றிருந்த அப்பெண் மீளத் திரும்பி வந்து இந்த முகாமில் தங்கியிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

### நாளை

ஆடி -06

புதன்கிழமை

திதி: சதுர்த்தசி முன்னிரவு: 08.58வரை.

நட்சத்திரம்: திருவாதிரை. பிற்பகல்: 2.40 வரை.

சுபநேரம்: 04.31 - 06.01

ராகுகாலம்: 12.01-01.31

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நாம் சாகும்போது நமக்காக வெட்டியான் கூட வருத்தப்படும்படி வாழ முயல்வோமாக.

மார்க் ட்வைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இன கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. A. அருளானந்தம், இல. 588/8, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் (ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை) நண்பகல் 12 மணியில் இருந்து பார்வையிடலாம்.

[57681]

## திருமணசேவை

எங்களிடம் எல்லா மதத்தினருக்கும், உத்தியோகத்தில் மணமக்கள் உண்டு. 67ஆம் ஆண்டு 8 இல் செவ்வாய், கார்த்திகை நட்சத்திரமுடைய நோர்வேயில் Computer Engineer ஆக கடமை புரியும் மணமகனுக்கும் கிறிஸ்தவ மதத்தில் மணமக்கள் உண்டு. குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.

(57717)

# யாழ். கல்விக் கல்லூரி விரைவில் கோப்பாய் கலாசாலையில் இயங்கும்

## ஒழுங்குகளைச் செய்ய வாக்குறுதியாம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வெகு விரைவில் கல்விக் கல்லூரியை ஆரம்பிக்க கல்வியமைச்சு முடிவுசெய்துள்ளது. இதற்கு மூலகர்த்தாவாக அமைபவர் ஓய்வு பெறும் எமது அதிபர் காரை செ. சுந்தரம்பிள்ளை என்று கூறின் மிகையாகாது.

இவ்வாறு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் புதிய அதிபராக பதவியேற்றுள்ள மு. பரஞ்சோதி கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளைக்கு விரிவுரையாளர்களால் வழங்கிய பிரியாவிடையின் போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசும் பொழுது கூறியதாவது:

காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் கொழும்பில் பங்கு பற்றிய முக்கியமான மகாநாடுகளில் எல்லாம் யாழ்ப்பாணத்தில் உடனடியாகக் கல்விக் கல்லூரியை ஆரம்பிக்கும்படி வலியுறுத்தி வந்தார். அப்போதெல்லாம் கல்விக் கல்லூரிக்குரிய கட்டடத்தை எங்கே அமைப்பதென்ற சிக்கல் இருக்கின்ற காரணத்தால் அதனை உடனடியாக ஆரம்பிக்க முடியவில்லை எனப் பதில் கூறப்பட்டது.

அப்போது நீங்கள் கட்டடத்தை விரும்பிய இடத்தில் கட்டுங்கள் ஆனால் கல்விக் கல்லூரியை கோப்பாயில் உடனடியாக ஆரம்பியுங்கள். கட்டடத்தைக் கட்டிய பின்னர் ஆரம்பிப்பதானால் மூன்று நான்கு வருடங்கள் செல்லும் என்று அதிபர் கூறி வந்தார்.

அவரின் வற்புறுத்தலைத் தொடர்ந்து உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கல்விக் கல்லூரியை இயக்குவதற்கான ஒழுங்குகள் விரைவில் செய்வதாக வாக்குறுதியளித்தார். நடவடிக்கையும் எடுத்துள்ளார். அப்போது நானும் கூட இருந்தவன் என்றபடியால் இதனைக் கூறுவதில் பெருமைப்படுகிறேன்.

விரிவுரையாளர் கழகத்தின் சார்பில் பேசிய திருமதி கலா பொன்னம்பலம் பேசுகையில்—

காரை செ. சுந்தரம்பிள்ளையவர்கள் சிறந்த நிருவாகியாகவும், மரபுவழிக் கவிஞராகவும், நாட்டுக் கூத்துக் கலைஞராகவும், அத்துடன் சிறந்த ஆளுமையுடைய ஆசிரியராகவும் விளங்கி எமது கலாசாலைக்குப் பெருமை தேடித்தந்தார்—என்றார்.

பண்டிதர் இராசரத்தினம், கல்வயல் வே. குமாரசாமி, திருமதி சா. சிவநேசன், செ. செந்தில்மணி ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். (அ)

# முன்னாள் மேயர் தர்மலிங்கம் மறைவு

யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயரும், தமிழீழ விடுதலை அமைப்பின் தலைவருமான டாக்டர் எஸ். எஸ். தர்மலிங்கம் தமது 90ஆவது வயதில் அண்மையில் லண்டனில் காலமானார்.

1983 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இவர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படிருந்தார்.

அச்சமயம் தாக்குதல்மூலம் சிறை உடைக்கப்பட்டு பலர் விடுவிக்கப்பட்ட போதும் வெளியே வர மறுத்து தொடர்ந்தும் சிறையில் இருந்து பின்னர் விடுதலையானார். (ஐ-3)

# ஊரடங்கு வேளையில் புலோலியில் திருட்டு

## முன்னாள் பொலீஸார் வீட்டில்

வடமராட்சி, ஜூலை 21

புலோலி தெற்கு சாரையடிப் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த சனி இரவு ஜன்னற் கம்பிகள் உடைக்கப்பட்டு அதன் வழியாக நுழைந்து சுமார் 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தாலிக் கொடி உட்பட தங்க நகைகள், ரொக்கப் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் நடைபெற்ற இச் சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

அதனையடுத்து பருத்தித்துறை பொலீஸார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

சம்பவதினத்தன்றுஊரடங்கு இரவு நேரத்தில்— இரவில்— வீட்டில் உள்ளோர் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் பிறிதொரு அறையில் இருந்த போது ஜன்னற் கம்பிகளை உடைத்து வீட்டுக்குள்நுழைந்த கொள்ளையர்கள் அலுமாரியில் இருந்த தங்கநகைகளையும், ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

# நல்லூரில் சிறுவர்களுக்கு விரைவில் பிறப்புப் பதிவு!

யாழ்ப்பாணம், ஜூலை 21

நல்லூர்ப்பிரதேசசெயலர் பிரிவில் பிறப்பு அத்தாட்சிப் பதிவு இல்லாத சிறுவர்களுக்கு பிறப்புப்பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேசசெயலர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் நலன் பேணும் குழு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

இந்தக் குழுவின் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது இது தொடர்பாக ஆராயப்பட்டது.

ஒரு வயது முதல் 18 வயது வரையுள்ள சிறுவர்களின் புள்ளி விவரங்களைத் திரட்டுவதெனவும் —

அதனடிப்படையில் பிறப்புப் பதியாத சிறுவர்களுக்கு பதிவுகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்வதெனவும்— அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் திருமணம் செய்து இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத குடும்பங்களுக்கு விவாகப் பதிவுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுப்பதெனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

பாடசாலைகளில் படிக்கும்பிள்ளைகளின் போசாக்கு நிலை குறித்து ஆய்வுசெய்து அதற்கான திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-ரி)

# இல்லம் அன்பளிப்பு

வடமராட்சி, ஜூலை 21

பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை குருவானவர் இல்லத்துக்கென வீட்டுடன்கூடிய 4 பரப்புக்காணி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. திருமதி மேரி அமிர்தம்மா பக்கஸ் என்பவர் பருத்தித்துறை வெஸ்லி லேனில் உள்ள தனது இவ் வீட்டுடன் கூடிய காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அன்பளிப்புச்செய்யப்பட்ட காணியை பருத்தித்துறை சேகர கண்காணிப்புக்குரு அருள் திரு பி. ஜே. மேதர் பெற்றுக்கொண்டார்.

(ஐ-173)

# ஜெயந்தி தின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 21

கைதடி சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையாரின் 81 ஆவது ஜெயந்தி தின விழா இன்று பி. ப. 2-30 மணிக்கு கைதடி சச்சிதானந்த ஆச்சிரமத்தில் இ. குழந்தைவடிவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

குருவருளின் பெருமை பற்றி சொற்பொழிவுகளுடனும், குருபூசையும், பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளன. (ஐ-5)

# சுந்தரர் குருபூசை

வடமராட்சி, ஜூலை 21

பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் கோவிலில் இம் மாதம் 31 ஆம் திகதி சுந்தரமூர்த்திநாயனார் குருபூசையும், ஆடிச் சோதி உற்சவமும் நடைபெறவுள்ளன.

(ஐ-173)

# வர்த்தக ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ். வர்த்தக ஊழியர் சங்கத்தின் செயற்பாடுகள் இம்மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அச் சங்கத்தின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

புதிய நிர்வாக சபையின் கீழ் இயங்க ஆரம்பித்துள்ள இச் சங்கத்தில் சகல வர்த்தக ஊழியர்களையும் அங்கத்தவர்களாகச் சேர்ந்து உரிமைகளை நிலைநாட்ட ஒன்றுபடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-3)


# தேவை

யாழ். மாவட்டத்தில்
யோக்கட் விற்பனையாளர்கள் தேவை.

நாள் வேதன அடிப்படையில் அல்லது தரகு அடிப்படையில் யோக்கட் விற்பனை செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி/ 4329)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
13 — 11 — 1925



மறைவு
21 — 06 — 1998

## திருமதி நாகலிங்கம் அன்னப்பிள்ளை

அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் இதயங்களில் என்றும் நிலைத்து நிற்கும். இறையடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது தெய்வத்தின் பிரிவு அறிந்தவுடன் துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அந்தியேட்டி 21 – 07 – 98 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி தெற்கு,
கைதடி.

(57676)

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10 — 09 — 1938



உதிர்வு
21 — 07 — 1990

## திருமதி பிறிஞ்சி சறோஜினி ஜெயராஜா

ஆண்டுகள் எட்டு அகன்றாலும்
அகலாது உம் நினைவு
அன்போடு எமை வளர்த்த
அருந்திருவே! காலமெல்லாம்
உமை நினைந்து கலங்குகின்றோம்
இப்புவியில்.

அன்புடன் நினைவு கூரும்:
கணவன், பிள்ளைகள்.

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

(57716)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரசபைக்கு ஏற்பட்ட இழப்பு
# ரூ.ஒருகோடி 78இலட்சம் என மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஜூலை 21
1995 இல் இடம்பெற்ற இடம்பெயர்வுக்குப் பின்னர் யாழ்.மாநகரசபை ஒருகோடி 78 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை இழந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை இழந்த பொருள்களின் விவரமும், அவற்றின் பெறுமதிகளும் வருமாறு:-

தளபாடங்கள்— 19 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா.

வாகனங்கள்—82 இலட்சம் ரூபா.

களஞ்சியப் பொருள்கள்— 48 இலட்சத்து 37 ஆயிரம் ரூபா.

புத்தகங்கள் — 35 இலட்சத்து 18 ஆயிரம் ரூபா.

வாகனங்களில் உழவியந்திரங்கள், பவுஸர்கள், டிப்பர்கள், றோலர்கள், வண்டிகள், லான்ட்மாஸ்டர்கள் போன்றவையும், இயந்திரங்களில் தட்டச்சுகள், நீரிறைக்கும் இயந்திரங்கள், மோட்டர்கள் போன்றவையும் அடங்கும்.

இந்த இழப்பீடுகள் தொடர்பான விவரங்கள் வடக்கு — கிழக்கு மாகாண அமைச்சுக்கு அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5-ரீ)

## நித்தம்புவ குண்டுவெடிப்பு; 20 பேர் விசாரணையில்

கொழும்பு, ஜூலை 21
நித்தம்புவவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக பொலிஸார் 20 பேரைக் கைது செய்து விசாரித்து வருகிறார்கள்.

குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வு நிலையத்தில் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

பாதாள உலக குற்றவாளிகள் இக்குண்டுத் தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்ததாக பூர்வாங்க விசாரணைகள் தெரிவிக்கின்றன. (ஐ-3)

# வலி. தெற்கில் வீடமைப்பு கடன் வழங்குவதற்கு நிதி

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மக்களுக்கு கிராமிய, நகர வீடமைப்புத்திட்டங்களின் கீழ் வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட உள்ளன.

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபை இதற்கென 12 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேசத்திலுள்ள அறுபதுபேருக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட உள்ளன.

கிராமிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 35 பேருக்கும் நகர வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 25 பேருக்கும் இந்தக் கடன்கள் வழங்கப்பட உள்ளன.

(ஐ-152)

### மாநகரசபை எல்லைக்குள்
# அனுமதி இன்றி கட்டடம் அமைப்பதற்குத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ். மாநகர சபை எல்லைக்குள் மேலதிக கட்டட திருத்த வேலைகள், புதிய கட்டடங்களை அமைத்தல் ஆகியனவற்றுக்கு மாநகர சபையின் திட்டமிடல்பகுதியினரின் முன் அனுமதிபெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முன் அனுமதி பெறாத கட்டட வேலைகளை மேற்கொள்வோர் மீது யாழ். மாநகரசபையினால் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநடவடிக்கைகள் தொடர்பாக மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் கூறியதாவது;-

மாநகரசபைக்குச்சொந்தமான யாழ். பருத்தித்துறை வீதி, 3ஆம்ஒழுங்கையிலுள்ள கழிவு நீர்வாய்க்கால்ஒன்றை மூடி கட்டடச் சுவர் ஒன்று எழுப்பப்பட்டது தொடர்பாக எமக்குக் கிடைத்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து மேற்படி இடத்திற்கு எமது அதிகாரிகள் குழு ஒன்று நேரடியாகச் சென்று சம்பந்தப்பட்ட நபரை எச்சரிக்கை செய்ததுடன் அந்தக்கட்டடச் சுவரும் பொதுமக்களின் உதவியுடன் உடைத்தெறியப்பட்டது.

இதே போன்று யாழ். கந்தப்பசேகரம் ஒழுங்கையில் (வாளிக்கிணற்றடி ஒழுங்கை) நகரமையப்பகுதியிலிருந்து கழிவு நீர் வெளியேறும் வாய்க்கால் ஒன்றினை அடைத்துச் சுவர் எழுப்பப்பட்டு வருகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவரிடம் நேரில் சென்று தெரிவித்தோம்.

ஆனால் அவர் எமது கருத்துக்களுக்கு மதிப்பளிக்காது செயற்படுகின்றார். அவர் மீது விரைவில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

(ஐ-5-ரீ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாம்பிகை சிவபாதசுந்தரம்

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி கமலாம்பிகை சிவபாதசுந்தரம் காலமானார்.

அன்னார் திரு. திருமதி முருகேசுவின் புத்திரியும், திரு. சு. சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும், சிவராசா (விரிவுரையாளர் — பௌதிகவியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம் — தற்போது University of Bath U. K.), பாலமுரளி (பல்கலைக்கழகக் கல்லூரி, வவுனியா), ஜெயராஜன் (2 ஆம் வருடம், விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சிவநேசன் (வசந்தன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21-7-98) பகல் ஒரு மணியளவில் நடைபெறும்.

தகவல்:
சி. ஜெயராஜன்
(மகன்)

சாஸ்திரியார் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை.

(57729)

### தம்பிப்பிள்ளை துரைரத்தினம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை துரைரத்தினம் அவர்கள் கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது கொழும்பு இல்லம் அமைந்துள்ள இல. 22, எசக்கிமுத்துபிளேஸ், கொட்டாஞ்சேனையில் (22-7-98)புதன்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
து. ஜெகநாதன் குடும்பம்
(மகன்-கொழும்பு)
பொ. தங்கராஜா

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
T. P. No 331299
(57721)

## மரண அறிவித்தல்

### E. P. R. மஹேந்திரன்

(இளைப்பாறிய Forman வாழைச்சேனைக் கடதாசிக் கூட்டுத்தாபனம்)

பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற முகாந்திரம் E. P. இராசையா (முன்னாள் St. Johns Ambulance மாகாண ஆணையாளர்) அன்னலக்ஷ்மி தம்பதிகளின் மகனுமாகிய E. P. R. மஹேந்திரன் 20 - 07 - 98 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் சிவபாக்கியம் (இராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும், E. P. R. இராஜேந்திரன் (இளைப்பாறிய உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை), E. P. R. குலேந்திரன் (Project Manager Hemes Drugs Ltd. Colombo), காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஸ்பராணி இராஜேந்திரன், பத்திரா குலேந்திரன், சதாசிவம், நகுலநாதன், ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், இராஜேஸ்வரன் (ரமணன்), அருந்ததி, நிருபராணி, சிவகணேஸ் ஆகியோரின் சிறிய தந்தையும், நீலரஞ்சினியின் (குட்டி) தந்தையும், வசந்தகுமாரின் மாமனாரும், தாட்சாயினியின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 22-07-98 பிற்பகல் 2.30 மணியளவில் (புதிய நேரம்) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
சிவபாக்கியம் (இராசாத்தி)
(மனைவி)

179, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(57735)


## நல்லூர், வடமராட்சி 'லயன்ஸ்' கழகங்களும் அரங்க செயற்பாட்டுக் குழுவும் இணைந்து

நடத்தும்

# பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

(1998 ஒகஸ்ட் ஜி- சீ. ஈ. (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கானது)

★ கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட கையேடுகள் விநியோகம் (Tutorials) - இலவசம்
★ விளக்கவுரைகள் ★ சந்தேகங்களுக்கான விளக்கங்கள்

() நேர அட்டவணை ()

| திகதி | நேரம் | இடம் | பாடம் | ஆசிரியர் |
|---|---|---|---|---|
| 22-07-98 | 9-00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — இரசாயனவியல் | — தில்லைநாதன் |
| | 3-00 P. m. | நாவலர் மண்டபம் | — பௌதிகவியல் | — வர்ணம் |
| 23-07-98 | 9-00 A. m. | Science Hall | — இரசாயனவியல் | — தில்லைநாதன் |
| | 10-00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — பௌதிகவியல் | — வர்ணம் |
| 24-07-98 | 9-00 A. m. | இளங் கலைஞர் மன்றம் | — தாவரவியல் | — குகாதரன் / குணசீலன் |
| | 9-00 A. m. | Science Hall | — தூய/பிரயோக கணிதம் | — குணசிங்கம் |
| | 10-00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — விலங்கியல் | — ஈஸ்வரதாசன் |
| 25-07-98 | 9-00 A. m. | Science Hall | — விலங்கியல் | — ஈஸ்வரதாசன் |
| | 9-00 A. m. | இளங் கலைஞர் மன்றம் | — வணிக புள்ளி விபரவியல் | — றோய் |
| | 10-00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — தாவரவியல் | — குகாதரன் / குணசீலன் |
| | 10-00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — தூய/பிரயோக கணிதம் | — குணசிங்கம் |
| 26-07-98 | 9-00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — பௌதிகவியல் | — கணேசன் |
| | 2-00 P. m. | Science Hall | — பௌதிகவியல் | — கணேசன் |
| | 9-00 A. m. | இளங் கலைஞர் மன்றம் | — கணக்கியல் | — சிறி |
| | 9-00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — வணிக புள்ளி விபரவியல் | — றோய் |
| 27-07-98 | 10-00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — கணக்கியல் | — சிறி |

குறிப்பு: 1998 ஒகஸ்ட் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

(57734)


## அன்னதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 21
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் அன்னதான சபையால் மாவைக் கந்தன் தேர்த் திருவிழா தினமான நாளை புதன்கிழமை அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (ஐ)

## ஆங்கில தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 21
வண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் ஆங்கிலதின விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வலயம்— 1 ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் டி. ஆர். அருமைநாயகம் கலந்து கொள்வார். (ஐ)

## குடும்பஸ்தர் தற்கொலை!

வன்னிக்குச் சென்று திரும்பிய குடும்பஸ்தர் கடன் தொல்லையினால் நஞ்சு அருந்தி மரணமானார்.

புலோலி மேற்கு சாளம்பை என்ற இடத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சண்முகநாதன் (வயது-40) என்ற குடும்பஸ்தரே நஞ்சருந்தியவர் ஆவார்.

இவரது மரண விசாரணையை நடத்திய பருத்தித்துறை பதில்நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கி உறவினரிடம் சடலத்தைக் கையளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல தொழிற்சாலைகள் மூடப்படும் ஆபத்து!

## ஊழியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் உள்ள பல தொழிற்சாலைகள் மூடப்படும்ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகஇலங்கை வர்த்தக கைத்தொழில் ஊழியர் சங்கம்கூறுகிறது,

சென்ற வருடம் ஜூலை மாதத்தில் இருந்து இதுவரையில் 15 தொழிற்சாலைகள் மூடப்பட்டு உள்ளன என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்டப்படி தொழிற்சாலைகள் மூடப்பட்டால் அரசாங்கமோ, முதலீட்டுச் சபையோ எந்த வித நடவடிக்கையையும் எடுக்க முடியாது.

எனவே ஊழியர்களின் நன்மை கருதி சட்டங்களில் திருத்தம் கொண்டு வரவேண்டும்.

அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் காரணமாகவே தொழிற்சாலைகள் மூடப்படுவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால்சுமார் 3ஆயிரத்து 500 பேர் வேலை இழந்துள்ளனர். (ஐ-3)

## இனந்தெரியாதோர் இரவுவேளையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 21

இரவு நேரம் வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டு ஒருவர் படுகாயமடைந்தார்.

நவிண்டில் குளங்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 30 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் கந்தவனம் கணேசமூர்த்தி (வயது 43) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றம்செய்யப்பட்டுள்ளார். (ஐ-15)


எமது வீடியோ CD வெளியீடுகள்

பிரியமுடன்
நட்புக்காக
(Computor Mixing)

ஒறிஜினல் வெளியீடுகள்

வெற்றி
இணைந்த கைகள்
பாட்டு வாத்தியார்
தீர்ப்பு என்கையில்
100 ஆவது நாள்
வைதேகிகாத்திருந்தாள்
திருப்புமுனை
13ஆம் நம்பர் வீடு
படிச்சபுள்ள
பொறுத்தது போதும்
எனக்கு நானே நீதிபதி
பிரியா
என்றும் அன்புடன்
புவனா ஒரு கேள்விக்குறி
தெற்கத்திக்கள்வன்
அமரன்
என் தங்கச்சி படிச்சவ
மூன்றுமுடிச்சு
இதுதாண்டா சட்டம்
WORLD CUP FOOTBALL '98

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/4342)


## மிதிவெடிக்கு மாடுகள் பலி!

நெல்லியடி, ஜூலை 21

கடந்த ஒரு மாத காலப் பகுதியில் புலோலிப்பகுதியில் ஐந்து மாடுகள் மிதி வெடியில் சிக்கி உயிரிழந்துள்ளன.

புலோலி வராத்துப்பளை ஈஸ்வரன் கோயிலடியில் உள்ள இராணுவ காவலரண் பகுதியில் மிதி வெடியில் சிக்கியே இந்த மாடுகள் உயிரிழந்தன. (ஐ-109)

## சிவசிதம்பரத்துக்கு மூதறிஞர் பட்டம்

கொழும்பு, ஜூலை 21

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரத்தின் 75 ஆவது பிறந்த தினமான நேற்று அவருக்கு 'மூதறிஞர்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், அமிர்தலிங்கம் நினைவுப் பணிக் கழகமும் இணைந்து அவருக்கு இந்த சிறப்புப் பட்டத்தை வழங்கின. யாழ். மாநகர மேயர் பொ. சிவபாலன் அவருக்கு இந்தப் பட்டத்தை வழங்கினார்.

சிவசிதம்பரத்தின் 75ஆவது பிறந்த தினத்தையொட்டி நேற்று கொழும்பில் சில இந்து ஆலயங்களிலும் கிறிஸ்தவ ஆலயங்களிலும் விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் சிவசிதம்பரத்தின் வீட்டுக்குச் சென்று அவருக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துத் தெரிவித்தார். வேறு பல பிரமுகர்களும் அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (ஐ-1-9)


உ

சாவகச்சேரி

அருள்மிகு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

சித்திரத்தேர்

நாளை 22-07-98 புதன்கிழமை

தேவி அம்பாள் சித்திரத்தேரேறி வலம் வந்து பக்தர்களுக்கு திருவருள் பாலிப்பாள் அத்தினத்தன்று அனைத்து அம்பாள் அடியார்களும் அன்னை அருள் பெறுவோமாக.

விழா சிறப்புற வாழ்த்துவோர்.

அம்பாள் பார்மஸி அன்ட் குறோசரி

இல. 1, நவீன சந்தை, சாவகச்சேரி.

(சி/4340)


பொலீஸ் தலைமையக களஞ்சியத்தில்

# பலகோடிரூபா பெறுமதியான பொருள்கள் மாயமாக மறைவு

கொழும்பு, ஜூலை 21

கடந்த 6 ஆண்டுகளாக பொருள் மதிப்பீடுகள் எவையும் மேற்கொள்ளப்படாதுள்ள பொலீஸ் தலைமையகத்தின் பிரதான எழுதுகருவிகள் களஞ்சியத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள 400 வகையானபொருள்கள் மாயமாக மறைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

களஞ்சியத்திலிருந்து கடத்தப்பட்ட பொருள்களில் சில பொலீஸ் தலைமையக வாகனங்களிலேயே புறக்கோட்டையில் உள்ள கடைகளுக்கும் மேலும் சில பொலீஸ் உயரதிகாரிகளின் வீடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளன என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகக்கூறப்படுகிறது.

பொலீஸ் தலைமையகத்திலுள்ள விநியோகப் பிரிவைச் சேர்ந்த பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் ஓரிரு தினங்களில் சில அதிகாரிகள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆவணப் பைகள், கணணிப்பன்கள், மின் குமிழ்கள், சிற்றூழியர்களின் சீருடைத் துணிகள், எழுதுகருவிகள், இலத்திரன் தட்டச்சுயந்திரங்கள் போன்ற 400 வகையான பொருள்கள் மாயமாய் மறைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது,

மாதாமாதம் களஞ்சியத்திலுள்ளபொருள்கள் இருப்பு எடுக்கப்பட வேண்டும் என்ற விதி உள்ள போதிலும் கடந்த 6 வருடங்களாக எதுவித மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மற்றொரு சிறுவனும் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

தாய் ஒருவர் தன்னுடன் சேர்த்து தீ மூட்டியதில படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றொரு சிறுவனும் நேற்று முன்தினம் இரவு மரணமானான்.

கனகரத்தினம் சயந்தன் (வயது-4) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார். மரண விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மீசாலையில் நடந்த இந்த தீக்குளிப்புச் சம்பவத்தில் பிரஸ்தாப சிறுவனின் தாயும் சகோதரனும் உயிரிழந்தது தெரிந்ததே. (ஐ-15-139)

## விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம் ஜூலை 20

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த சனிக்கிழமை கலாசாலை அதிபர் மு. பரம்சோதி தலைமையில் நடைபெற்றன. விழாவில்முதன்மை விருந்தினராக உடற்கல்வித் துறை முன்னாள் விரிவுரையாளர் க. யதுகுலசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலாளர் க. கேதீஸ்வரனும் கல்வித்திணைக்கள வலயம் 01 கணக்காளர் தி. சுதந்திர பாலனும் கலந்து கொண்டனர்.

விளையாட்டுப் போட்டியில் சுவர்ணா இல்லம் அதிகூடிய புள்ளியாக 244 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (ஐ-6)

## கவின்கலை மன்ற கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

இராமநாதன் நுண்கலைத் துறை கவின்கலை மன்றத்தின் கூட்டம் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு இராமநாதன் நுண்கலைத் துறை கலையரங்கில் நடைபெறவுள்ளது. [ஐ]

## இலங்கைக்கு 2 தங்கப்பதக்கம்

கொழும்பு, ஜூலை 21

ஜப்பானில் நடைபெறும் ஆசிய மெய்வன்மைப் போட்டிகளில் இலங்கை இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் சுகத் திலகரட்ணவும் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் தமயந்தி தர்ஸாவும் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றதோடு 400 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் புதிய ஆசிய சாதனைகளையும் நிலை நாட்டியுள்ளனர்.

இலங்கை வீரர் சுகத்திலகரட்ண 44.61 செக்கனில் குறிப்பிட்ட தூரத்தைக் கடந்து புதிய சாதனையை நிலை நாட்டினார். வீராங்கனை தமயந்தி தர்ஸா 51.23 செக்கனில் 400 மீற்றரை ஓடி முடித்ததன் மூலம் புதிய ஆசிய சாதனையை நிலை நாட்டியுள்ளார். (ஐ-ரீ)

பொது நிகழ்ச்சிகளுக்காக

## பாடசாலை மாணவருக்கு ரிக்கெட் விற்கத் தடை

குருநகர், ஜூலை 21

பாடசாலையுடன் தொடர்பில்லாத நிகழ்ச்சிகளுக்காக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நுழைவுச் சீட்டுக்களை விற்பதை அனுமதிப்பதையும் அவற்றினை வாங்குமாறு நிர்ப்பந்திப்பதையும் அதிபர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

பாடசாலையுடன் சம்பந்தப்படாத நிகழ்ச்சிகளுக்கு பாடசாலை மண்டபங்களையும், மைதானங்களையும் பாவிப்பதற்கு கல்விப்பணிப்பாளரின் அனுமதி இன்றி அதிபர்கள் அனுமதி வழங்கக் கூடாது.

யாழ். கல்விவலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் வலயம் ஒன்றின் கீழ் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

பாடசாலையுடன் தொடர்பில்லாத நிகழ்வுகளுக்கு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு நுழைவுச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் அவற்றை வாங்குமாறு அதிபர்களினால் மாணவர்களும் ஆசிரியர்களும் வற்புறுத்தப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதை அடுத்தே இந்த அறிவுறுத்தல்களை கல்விப் பணிப்பாளர் வழங்கியுள்ளார். (ஐ-7-51)

### உலர்...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்யவேண்டிய கடமைகளில் இருந்து அரசாங்கம் தவறிவிட்டதாக இதன் மூலம் கருதக்கூடாது

மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் விவசாயத்தொழிலை மேம்படுத்துவதற்கு மேலும் பல மானிய வசதிகள் வழங்கப்படுவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிக்கின்றார்.

வன்னிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தமிழ் மக்களை பெருமளவில் அழைத்துச் செல்வதற்கு லட்சக் கணக்கான ரூபாக்கள் செலவிடப்படுகின்றன.

இந்த மாதம் முதல் நிவாரண உதவிகள் குறைக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையில் வெளியான அறிக்கைகள் காரணமாக பல தமிழ்க் குழுக்கள் இந்தத் தீர்மானத்தை மறு பரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

ஆனால் இந்தச் செய்திகள் அனைத்தும் அரசாங்கத்தின் நீண்டகால கொள்கைத்திட்டத்தை முற்றாகத் திரித்துக் கூறுவதாக உள்ளது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-9]

### நிவாரண...

(முதலாம் பக்கத் தொடர்)

செயலருக்கும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிக்கும் முகவரியிடப்பட்ட மகஜர்கள் அங்கு வைத்துக் கையளிக்கப்பட்டன. [ஐ-9]

### மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்)

சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் டி. ஜெகநாதனுடன் சங்க உத்தியோகத்தினர் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவர்களின் பிரதான கோரிக்கைகள் சிலவற்றை ஏற்றுக் கொள்ள அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(முன்னர் வந்தசெய்தி இரண்டாம் பக்கத்தில்) (இ-9)

### 'கறுப்பு ஜூலை'..

(முதலாம் பக்கத் தொடர்)

விடப்பட்டன. அதன் உச்சக்கட்டமாக வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் 1983 ஜூலை 23 ஆம் 25 ஆம் திகதிகளில் சிறைக்குள் வைத்து கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச்சம்பவங்களே இலங்கையின் வரலாற்றில் 'கறுப்பு ஜூலை' என அழைக்கப்படுகின்றது. [ஐ-9-10-21]

### கீரிமலையில்

(முதலாம் பக்கத் தொடர்)

துள்ளார்.

அன்று காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பொதுமக்கள் அங்கு சென்று பிதிர்க்கடன் செய்து நீராட முடியும் என்றும்—

அடியார்கள் தெல்லிப்பழையில் உள்ள காவல் நிலையத்தில் தமது அடையாள அட்டையையும், வாகனங்களை கையளித்துவிட்டு அங்கிருந்து விசேட பஸ் மூலம் கீரிமலை செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அரச அதிபர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-ரீ-100)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org